//மின்னஞ்சல்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க. எண். 4177 /ஆ4/2024 நாள் : 21.10.2024

பொருள்: பள்ளிக்கல்வி - 2024-2025 மத்திய அரசின் உதவித்தொகைத் திட்டம் –தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்பு உதவித்தொகைத் தேர்விற்கு (National Means –Cum –Merit Scholarship)– மாணவர்கள் சிறப்பாக எதிர்கொள்ளும் நோக்கில் –8 ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு –இணையதளம் வழியாக பயிற்சி வழங்குதல் தொடர்பாக

பார்வை: மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வரின் கடித நாள் 16.10.2024

========

பார்வையில் காணும் கடிதத்தின் படி , வேலூர் மாவட்டத்தில் 2024 – 2025 ஆம் கல்வியாண்டில் நடைபெறவிருக்கும் தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்பு உதவித்தொகைத் தேர்விற்கு (National Means –Cum –Merit Scholarship) மாணவர்கள் சிறப்பாக ஊக்கத்தொகை தேர்வினை எதிர்கொள்ளும் பொருட்டு எட்டாம் வகுப்பு போதிக்கும் ஆசிரியர்களின் வழியே மாணவர்களுக்கு பயிற்சிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் /மாநகராட்சி /நகராட்சி /ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளில் எட்டாம் வகுப்பு பாட ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வழிக்காட்டுதலோடு பயிற்சிகள் நடத்திட ஏதுவாக பள்ளிக்கு ஒரு NMMS ஆசிரியர் வீதம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google Sheet –ல் பதிவுகள் மேற்கொள்ள அறிவுறுத்திட அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் /மாநகராட்சி /நகராட்சி /ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை /தொடக்கக்கல்வி) ஒருங்கிணைந்து நடைபெறவுள்ள ஊக்கத்தொகை தேர்வில் மாணவர்கள் வெற்றி அடைய வாரம் ஒரு முறை சிறு தேர்வுகள் நடத்திடவும் தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

- அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் /மாநகராட்சி /நகராட்சி /ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/ தொடக்கக்கல்வி) அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு
- முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,இராணிப்பேட்டை. தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.